# Role of Arabic Tamil in Teaching of Al Quran:

## -A special reference to "Thadreesul Quran" written by O.M. Passi Alim-

# அல்-குர்ஆன் கற்பித்தலில் அறபுத் தமிழின் வகிபங்கு:

## "தத்ரீஸூல் குர்ஆன்" நூலை துணையாகக் கொண்ட ஆய்வு

I. M. Thalib[1]

*Abstract*

*Al-Quran is the most sacred scripture of Muslims. Muslims begin to understand it's meaning from their childhood. In the Muslim community, Al-Quran Madrasas play an essential role in the teaching of recitation of the Qur'an. There was a tendency among the early Muslims not to deal with languages other than Arabic when reciting the Qur'an as a divine scripture. Therefore, "Arabic Tamil" was used by them as an alternative. "Arabic-Tamil" means a type of Tamil language written in Arabic script. it was used by the Muslims of Sri Lanka and Tamil Nadu. The popular Muslim scholar O.M. Passi Aalim from Sammanthurai, East Sri Lanka has taught Arabic language for beginners through his book of 'Thadreesul Quran'. This study explains the significance of Al-Quran teaching and the role of Arabic Tamil in the teaching the Arabic language. To achieve objectives of study, the researcher used the descriptive and analytical approach to complete it and to reach the results. This is also revealed through the book of 'Thadreesul Quran" written by O.M.Passi Aalim.*

**Keywords:** *Arabic Tamil / Teaching of Arabic Language /Teaching of Al Quran /O.M.Passi Aalim*

### அறிமுகம்

திருக்குர்ஆன் என்பது இஸ்லாமிய மார்க்கத்தின் பிரதானமான மூலாதாரமாகும். இஸ்லாமிய மார்க்கமானது அடிப்படையில் இதன் மீதே கட்டியெழுப்பப்பட்டுள்ளது. திருக்குர்ஆனின் போதனைகளுக்கு முரணாக இயற்றப்பட்ட எந்தவொரு சட்டமும் இஸ்லாத்தில் ஏற்றுக் கொள்ளப்படாது. திருக்குர்ஆன் இஸ்லாத்தின் ஆரம்ப வளர்ச்சிக் கால கட்டத்திலிருந்து, கால, சூழலுக்கேற்ப, வானவர் ஜிப்ரீல் ஊடாக, முஹம்மது நபியவர்களுக்கு அல்லாஹ்வால் கட்டங்கட்டமாக இறக்கி வைக்கப்பட்டது.

"முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு நாற்பது வயதாகியபோது, தனித்திருந்து இறைவனை தியானித்து, நினைவு கூர்வது பிரியமாய் தோன்றியது. அதன்படி மக்காவிலுள்ள ஒரு மலைக்குகையில், தனிமையில் பல நாட்கள் கழித்த பின், ஒரு நாள் வானவர் ஜிப்ரீல் (அலை) அங்கு தோன்றி திருக்குர்ஆனின் "அலக்" என்ற அத்தியாயத்தின் முதல் ஐந்து வசனங்களை படிக்கும்படி செய்தார். இவையே துவக்கமாக இறக்கியருளப்பட்ட திருக்குர்ஆன் வசனங்களாகும். பின்பு, முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் இருபத்து மூன்று வருட நபித்துவ காலத்தில், பல்வேறு சந்தர்ப்பங்களில், தேவைக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப இறைவனால் வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்களுக்கு அறிவிக்கப்பட்டு, அவர் மூலம் முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்டது. குர்ஆன் என்ற வார்த்தையின் பொருள் ஓதுதல் என்பதாகும் - இது அதிகம், ஓதப்படக் கூடியது என்ற கருத்திலேயே

[1] Senior Lecturer, Department of Arabic, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka. Email: thalibm@esn.ac.lk

இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. மேலும் குர்ஆனுக்கு வேறு சில பெயர்களும் உண்டு அவற்றில் சில: வேதநூல் (அல்கிதாப்), பிரித்தறிவிப்பது (அல்புர்கான்), உபதேசம் (அத்திக்ர்), ஒளி (அந்நூர்), வழிகாட்டி (அல்ஹுதா) என்பனவாகும்.'' (மன்பயீ, தி.இ)

''முதலில் அல்குர்ஆன் முழுவதும் "லவ்ஹுல் மஹ்பூழ்" எனும் ஏட்டில் பதியப்பட்டிருந்தது. பின்பு அங்கிருந்து முழுமையாக கீழ் வானத்திற்கு (பைத்துல் இஸ்ஸா) இறக்கப்பட்டது. பின் ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூலம், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு, அவர்களது 40வது வயது முதல் அல்குர்ஆன் தொடர்ந்து கால, சந்தர்ப்ப, சூழ்நிலைகள், தேவைகளுக்கேற்ப 23 வருடங்களாக வசனங்களாகவும், அத்தியாயங்களாகவும் கட்டங்கட்டமாக அருளப்பட்டது. 'நிச்சயமாக இது மிக்க கண்ணியமுள்ள குர்ஆனாகும். (இது லவ்ஹுல் மஹ்பூழ் என்னும்) பாதுகாக்கப்பட்ட புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது. பரிசுத்தவான்களைத் தவிர (மற்றெவரும்) இதனைத் தொடமாட்டார்கள். உலகத்தார் அனைவரினதும் எஜமானாகிய இறைவனால் இது அருளப்பட்டது.'' வாகிஆ: வசனம் 77-80 (NIE, 2017, பக்: 72)

''அல்குர்ஆன் மனித வாழ்விற்கு வழிகாட்டும் வேதம். அது உலகில் வாழும் அனைத்து மனிதர்களுக்கும் அருளாக இறக்கப்பட்டது. அதன் போதனைகளைப் பின்பற்றியோர் ஒரு போதும் வழிதவற மாட்டார்கள். அவர்களது வாழ்வு ஒளிமயமாகும். வாழ்க்கை அர்த்தமுள்ளதாக காணப்படும். வாழ்வதன் நோக்கம் நிறைவேறும். அவ்வாறில்லாது அல்குர்ஆனின் போதனைகளை விட்டு விட்டு வேறு பாதைகளை யார் பின்பற்றுகின்றார்களோ, அவர்கள் உலக வாழ்வில் தட்டுத் தடுமாறி போவார்கள். இவர்கள் மனோ இச்சைக்கு கட்டுப்பட்டு, உலக வாழ்வில் மோகம் அதிகரித்தவர்களாக காணப்படுவர். சமூகத்தில் பல சீர்கேடுகள் அதிகரிக்கும். அத்துடன் மறுமையிலும் இவர்கள் நஷ்டமடைவார்கள். அல்குர்ஆனுக்கு நாம் செய்ய வேண்டிய பல கடமைகள் உள்ளன. அவற்றில் அதனை ஓதுவதும் ஒரு கடமையாகும். இக்கடமை அனைவராலும் செய்ய முடியுமான கடமைகளில் ஒன்றாகும். இது அல்குர்ஆனின் கட்டளைகளில் ஒன்றாகும்.'' (ஆஸாத், 2017)

அல்-குர்ஆனுக்கு செய்கின்ற கடமைகளில் ஒன்றான ஓதுதல் இருப்பது போலவே, அதனைக் கற்றலும் அவசியமாகும். கற்றல் என்பது அதை ஓதக்கற்றல் மற்றும் பொருளைக் கற்றல் என இரு வகைப்படும். அல்குர்ஆனை ஓதக்கற்றல் தொடர்பில் இவ்வாய்வு கவனம் செலுத்துகின்றது. குறிப்பாக, அல்குர்ஆனைக் ஓதக்கற்றுக் கொள்வதற்கு அறபுத் தமிழ் மொழிமரபு பங்களிப்பினை வழங்குகின்றது என்பதை இவ்வாய்வு கருதுகோளாகக் கொண்டுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

முஸ்லிம் மக்கள் மத்தியில் சமய விடயதானங்களை, அறபு தவிர்ந்த பிற மொழிகளில் கற்பது பிழையானது என்ற சிந்தனைப் போக்கு, முற்காலத்தில் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் காணப்பட்டது. இச்சிந்தனை முஸ்லிம்களின் சமய மற்றும் கல்வித் துறைகளில் தாக்கம் செலுத்தி வந்துள்ளது. இதனால் முஸ்லிம்கள் மாற்றுவழி குறித்து சிந்திக்க வேண்டிய நிலையேற்பட்டது. இதன் காரணமாக தமிழ் மொழியை தாய் மொழியாகக் கொண்ட, இலங்கை மற்றும் இந்திய முஸ்லிம்களிடையே அறபு மொழியைக் கற்பிக்க அறபுத் தமிழ் பயன்படுத்தப்பட்டது. எனவே,

அறபுத் தமிழின் மொழியியல் ரீதியான செல்வாக்கினையும் அதற்கான காரணத்தினையும் அது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஏற்படுத்திய பாதிப்பினையும் ஆய்வுக்குட்படுத்த வேண்டியுள்ளது.

**ஆய்வு நோக்கம்**

இவ்வாய்வு பின்வரும் நோக்கங்களைக் கொண்டுள்ளது:

1. அறபுத் தமிழை அறிமுகப்படுத்தல்.
2. அல்-குர்ஆன் கற்பித்தலின் சிறப்பினை விளக்குதல்.
3. ஓ.எம். பாஸி ஆலிம் அவர்களின் அறபு மொழிக் கற்பித்தலுக்கான வகிபங்கினை வெளிக்கொணர்ந்து கற்பித்தல் முறைமையில் அறபுத் தமிழின் செல்வாக்கினை தத்ரீஸுல் குர்ஆன் பாடநூலுக்கூடாக வெளிப்படுத்தல்.

**ஆய்வு முறையியல்**

மேலே குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக விவரண மற்றும் பகுப்பாய்வியல் முறைகள் பயன்படுத்தப்பட்டன. ஓ.எம். பாஸி ஆலிம் அவர்கள் எழுதிய தத்ரீஸுல் குர்ஆன் எனும் நூல் முதல் நிலைத் தரவாகவும் இரண்டாம் நிலைத்தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் மற்றும் இணையம் போன்றவற்றின் மூலம் தரவுகள் பெறப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டன.

**கலந்துரையாடலும், பெறுபேறுகளும்**

**1) அல்குர்ஆனைக் கற்பித்தலின் சிறப்பு**

ஆராய்தல், சிந்தித்தல், அவதானித்தல், உணர்தல், அறிதல், படிப்பினை பெறுதல், பாடம் பெறுதல், அறிவுரை பெறுதல், உற்றுக் கவனித்தல் போன்ற கல்வி மற்றும் அறிவியல் சம்பந்தமான வார்த்தைகள், திருக்குர்ஆன் வசனங்களில் அதிக இடங்களில் உள்ளன. கல்வியைத் தேடி பயணிக்குமாறு தூண்டும் படியான ஐம்பதுக்கும் மேற்பட்ட திருவசனங்கள் திருக்குர்ஆனில் இடம்பிடித்துள்ளன. வணக்க வழிபாடுகளில் இருக்கும் ஆர்வத்தை விட, கல்வி கற்பதிலும், அதை கற்பிப்பதிலும் தான் அதிக ஆர்வம் இருக்க வேண்டும் என்று, கீழ்வரும் நபிமொழி வலியுறுத்துகிறது: “நபி (ஸல்) அவர்கள் தமது மஸ்ஜித் நபவியில் இரண்டு சபையினரை கடந்து சென்றார்கள். அப்போது, ‘அவர்கள் இரு சாராருமே நன்மையான காரியத்தில்தான் உள்ளனர் (என்றார்கள்), எனினும் அவ்விருசாராரில் ஒரு சாரார் மிகவும் சிறப்பு வாய்ந்தவர், என்றார்கள். இதோ ஒரு சாரார் இறைவனிடம் பிரார்த்தனை செய்கின்றனர். மேலும் அவனிடம் அருளை எதிர்பார்க்கின்றனர். இறைவன் நாடினால், அவர்களுக்கு கொடுப்பான் அல்லது கொடுக்காமலும் இருப்பான். மற்றொரு சாராரோ அவர்கள் கல்வி ஞானத்தை தாமும் கற்று, அதை அறியாத மக்களுக்கு கற்றுக் கொடுக்கிறார்கள். எனவே, இவர்களே மிகச் சிறந்தவர்கள். நானும் கல்வி கற்றுக் கொடுக்கும் ஆசிரியராகவே இறைவனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளேன்’ என்று கூறிவிட்டு, அந்த சபையினரிலேயே அமர்ந்து விட்டார்கள்”. (தாரமீ, பதிப்பு: 2000, பாகம்: 1, பக்: 365)

கற்பித்தலில் மிகச் சிறந்தது, இறைவேதம் அல்-குர்ஆனைக் கறிபித்தல் ஆகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "உங்களில் மிகச் சிறந்தவர், அல்குர்ஆனை தானும் கற்று: பிறருக்கும் கற்றுக் கொடுப்பவரே." (புஹாரி, பதிப்பு: 2002, பக்: 1283). இப்போதனையால் கவரப்பட்ட முஸ்லிம்கள் அல்-குர்ஆனைக் கற்பிப்பதில் ஆர்வம் செலுத்தினர். ஆயினும், அல்-குர்ஆனை அறபி அல்லாத மொழியில் கற்பிக்க முடியாது என்ற கருத்தோட்டம் ஒரு காலகட்டத்தில் நிலவிய போது மாற்று வழியாக அறபுத் தமிழ் மொழி மரபைப் பின்பற்றினர். "அல்-குர்ஆனை அறபு மொழியில் படிக்க வேண்டும் என்றும், அதை வேறு மொழிகளில் மொழிபெயர்க்கக் கூடாது என்றும், அக்கால முஸ்லிம்களிடத்தில் ஒரு நம்பிக்கை இருந்தது. இதே நம்பிக்கை தமிழ்நாட்டு முஸ்லிம்களிடமும் இருந்தது. அல்-குர்ஆன் ஆயத்துக்களைப் பிறமொழி எழுத்துக்களைக் கொண்டு எழுதுவதை, இலங்கை முஸ்லிம் சமூகமும் கடுமையாக எதிர்த்தது. அல்-குர்ஆனுக்கு தப்ஸீர் என்று அழைக்கப்பட்ட விளக்க உரைகளைத் தானும் அறபு எழுத்தில் மட்டுமே எழுத வேண்டும். பிற மொழி எழுத்துக்களைப் பயன்படுத்தி எழுதக் கூடாது என்ற கருத்து இருபதாம் நூற்றாண்டின் முதல் கால்நூற்றாண்டிலும் கூட இருந்ததை ஏ.எம்.ஏ. அஸீஸ் சுட்டிக் காட்டியுள்ளார். இத்தகைய சிந்தனைக் போக்கினாலேயே தமிழ் பேசிய முஸ்லிம்கள் ஆரம்பத்தில் தாம் பேசிய தமிழை அறபு எழுத்தில் எழுதினார்கள் என்று கருத முடியும். (அமீன், 2000, பக்: 218)

### 2) அறபுத் தமிழ்

அறபுத் தமிழை வரைவிலக்கணப்படுத்துவதில் அறிஞர்களிடையே பல்வேறு கருத்தோட்டங்கள் உள்ளன. இது தொடர்பில் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை காண முடிகின்றது. "முஸ்லிம் தமிழ், தமிழ் வரிவடிவில் மட்டுமன்றி, இந்த நூற்றாண்டின் தொடக்கம் வரை அறபு வரிவடிவிலும் எழுதப்பட்டு வந்தது. இவ்வாறு அறபு வரிவடிவில் எழுதப்பட்ட முஸ்லிம் தமிழ் 'அறபுத்தமிழ்' என அழைக்கப்பட்டது. தமிழ் பேசும் முஸ்லிம்கள் மூலம் அறபு மொழி தமிழ் மொழி மீது ஏற்படுத்திய முக்கியமான விளைவுகளுள் ஒன்றாக அறபுத் தமிழை நாம் கருதலாம். ஹிந்தி மொழியின் ஒரு கிளை மொழியாகக் கருதத்தக்க உருது, அறபு லிபியில் எழுதப்பட்டு, சமூக அரசியல் காரணிகளின் அடிப்படையில் ஒரு தனிமொழி என்ற அந்தஸ்தைப் பெற்றுக்கொண்டது போல், அறபுத்தமிழ் ஒரு தனிமொழியாக மாற்றமடையாமல் மறைந்துவிட்டது." (நு.ஃமான், தி.இ., பக்: 27-28)

முஸ்லிம்களின் வாழ்வுடன் தொடர்புடையதாக அறபுத் தமிழ் நீண்ட காலமாக இருந்து வருகின்றது. முஸ்லிம்களின் சமய, கல்வி, இலக்கியச் செயற்பாடுகளுடன் இது நெருங்கிய தொடர்பினை கொண்டுள்ளமை, அண்மைக்காலமாக உயர்கல்வித் துறையில் அது ஆய்வுப் பொருளாக மாறியுள்ளமைக்கான காரணமாகும். தமிழை மலினப்படுத்தும் நோக்கில் அது தோற்றம் பெறவில்லை. மாறாக, முஸ்லிம்களின் கலாசாரத்தின் தனித்துவத்தின் அடையாளமாக தோன்றி வளர்ந்துள்ளது. "அறபுத்தமிழ் இலக்கியம் என்றால் அது பழங்காலத்தைச் சேர்ந்தது, முஸ்லிம் கவிஞர்களும், எழுத்தாளர்களும் பழங்காலத்தைச் சேர்ந்தவர்கள், அவை சரித்திர ஆசிரியர்களினதும், ஆராய்ச்சியாளர்களினதும் கவனத்திற்கே உரித்தானதென்று எண்ணிவிடுதல் கூடாது. அறபுத்தமிழ் இலக்கியம் பழங்காலத்தை மாத்திரம் சார்ந்ததாய் இல்லாமல் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையம் பொறுத்ததாகும் என்பதுடன், அது ஜீவனோடு கூடி வளர்ந்துவரும் ஒன்றாகவும் சென்ற காலங்களில் இஸ்லாமியத் தத்துவங்கள், எண்ணங்கள்,

வாழ்க்கை வழிகள் ஆகிய இரத்தினங்களை, தமிழ் உலகிற்கு வாரி வழங்கி இருப்பதைப் போன்று வருங்காலங்களில் இன்னும் பன்மடங்காக அச்சேவையில் ஈடுபட்டு முன்னேற வேண்டிய ஒன்றாகவும் இருந்து கொண்டிருக்கிறதென்பதை நன்கு ஞாபகத்தில் இருத்திக் கொள்ளுதல் வேண்டும்.'' (அஸீஸ், 1963, பக்: 90)


இம்மொழி மரபு இலங்கை முஸ்லிம்களிடையே மட்டுமன்றி தென்னிந்திய முஸ்லிம்கள் மத்தியிலும் தோன்றி வளர்ந்து, பல்வேறு இலக்கியப் படைப்புக்களை உருவாக்கியுள்ளது. ''தமிழ் மொழியை அறபு எழுத்துக்களில் எழுதுவது முஸ்லிம் கல்விமான்களால் மிகவும் தீட்சண்யமாகத் திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டது. அது இலங்கை, தென்னிந்திய முஸ்லிம்களுக்கேயுரிய தனித்தன்மை வாய்ந்த ஒரு மொழி மரபாகும். அறபுத் தமிழையும் அறபுத் தமிழ் ஆக்கங்களைம், அறபிகளுக்கு அதனை ஒருவாறு வாசிக்கலாம். ஆனால் விளங்க முடியாது. தமிழர்களுக்கு அதனை வேறுயாராவது வாசித்தால் ஓரளவு விளங்கலாம். ஆனால் வாசிக்க முடியாது என்ற இந்தத் தனித்துவம் அறபு லிபியில் அமைந்த தமிழுக்கே உண்டு. இதனை அறபுச் சொற்கள் கலந்த தமிழுக்குப் பயன்படுத்தினால் அதன் தனித்துவம் இல்லாமற்போகும்.'' (மஸாஹிர், 2018, பக்: 8-9)

### 3) தத்ரீஸுல் குர்ஆன் பாடநூல்

ஓ.எம். பாஸி ஆலிம் அவர்களினால் எழுதப்பட்ட இந்நூல் 1963இல் முதல் பதிப்பாக வெளியிடப்பட்டது. இது அக்காலம் முதலே குர்ஆன் மத்ரஸா எனப்படும் திண்ணைப் பள்ளிகளில் போதிக்கப்பட்டு வந்துள்ளது. அப்போதிருந்த ஒரு பிரபல்யமான நிறுவனம் அதனை வெளியிட்டிருந்தது. ஆயினும், காலப்போக்கில் ஏற்பட்ட புத்தாக்கம் தொடர்பான சட்டமாற்றங்களினால், குறித்த நூல் நேரடியாக எம்.எப்.எம். சாலிஹ் அவர்களால் பதிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்நூலின் சிறப்பம்சம், முறையான கற்பித்தல் நுட்பங்களைக் கொண்டமைந்ததாகும். அதாவது பாடநூல் என்ற வகையில், அது ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையில் இடைத்தொடர்பினை வலுவூட்டுகின்றது. இது பிள்ளை மையக் கல்வியின் பிரதான இலக்குகளில் உள்ளதாகும்.'' (முகைதீன், 2019, பக்: 358)

ஆசிரியர் தமது தத்ரீஸுல் குர்ஆன் என்ற நூலில் பல இடங்களில் அறபுத் தமிழ் குறிப்புக்களை பயன்படுத்தியுள்ளார். சில எடுத்துக்காட்டுக்கள்:

***எடுத்துக்காட்டு: 1***


28 ـ مَدّ وَاجِبْ ـ مَدّ جَائِزِيْ وِفِرِكُمْ فَادَمْ ٢٨
(مَدّ وَاجِبْ) يِنْرَالْ مَدّ دَيْ حَرْفُكْ فِنَالْ اَنْتَ كَلِمَه وِلِيْ هَمْزُ يِرُنْتَالْ
اَنْتَ مَتِّنْكُ مَدّ وَاجِبْ يِنْرُ چُلَّبَدُمْ. اَتِّي مُوْنْرُ اَلِفُكْ نِيْبَ وِيْنْدُمْ

மூலம்: பாஸி ஆலிம் ஓ.எம்.,2017, பக்: 28

"மத்து வாஜிப் என்றால் மத்துடைய ஹர்புக்கு பின்னால் அந்த கலிமாவிலே ஹம்ஸு இருந்தால் அந்த மத்திற்கு "மத்து வாஜிபு" என்று சொல்லப்படும். அதை மூன்று அலிபுக்கு நீட்ட வேண்டும்."


***எடுத்துக்காட்டு: 2***




மூலம்: பாஸி ஆலிம் ஓ.எம்.,2017, பக்: 29

"சாவெழுத்தென்றால் எழுத்தில் மட்டும் வரும். மொழிதலில் வராது. அவைகள் நாலு. (அலிப், லாம், வாவு, யா) அவைகளுக்கு அடையாளம் ஹரகது செய்யப்படாமலும் ஏய்க்கு நுக்தா இல்லாமலும் வரும்."


***எடுத்துக்காட்டு: 3***




மூலம்: பாஸி ஆலிம் ஓ.எம்.,2017, பக்: 37

"தன்வீனுக்குப்பின் ஷத்து வைக்கப்பட்ட (ரே, லாம்) இந்த இரு ஹர்புகளில் ஒன்று தன்வீனை சந்தித்தால் அந்த தன்வீனை ஒரு பத்ஹு அல்லது கஸ்ராக அல்லது ஒரு ழும்மாக கருதி அடுத்த ஷத்துள்ள ஹர்புடன் சேர்த்துக் கொள்ளவேண்டும்.


***எடுத்துக்காட்டு: 4***




மூலம்: பாஸி ஆலிம் ஓ.எம்., 2017, பக்: 39

“இத்காம் என்றால் ஒரு சுகூன் செய்யப்பட்ட ஹர்பை, ஹரகது செய்யப்பட்ட ஹர்பில் நுழைக்கிறது சுகூனுள்ள ஹர்புக்கு பின் ஷத்துள்ள ஹர்பு சேந்திட்டால், அந்த சுகூனுள்ள ஹர்பை விட்டு விட்டு, அதற்கு முந்தின ஹர்பை ஷத்துள்ள ஹர்புடன் இத்நாம் செய்யவேண்டும்.”

***எடுத்துக்காட்டு: 5***




மூலம்: பாஸி ஆலிம் ஓ.எம்., 2017, பக்: 44

“இக்பாவென்றால் மறைக்குதல். சுகூனுடைய நூனுக்குப்பின் அல்லது தன்வீனுக்குப் பின் இக்பாவுடைய ஹர்புகளில் ஒன்று வந்தால், குன்னாவுடன் இக்பா செய்து ஓதவேண்டும். இக்பாவுடைய ஹர்புகள் 15.”

மேலேயுள்ள எடுத்துக்காட்டுகளின் படி ஓ.எம். பாஸி ஆலிம் அவர்கள் தன்னுடைய தத்ரிஸுல் குர்ஆன் நூலில் அறபு மொழி கற்பித்தலுக்காக, விசேடமாக ஒரு முறையை கையாண்டுள்ளார். அதாவது அறபு மொழிக் கற்பித்தலுக்கு தாய்மொழி இன்றியமையாதது, தாய்மொழி ஊடாகவே பிறமொழி ஒன்று கற்பிக்கப்பட வேண்டும் என்பதை தெளிவுபடுத்துகின்ற அதேவேளை, முஸ்லிம்களிடம் காணப்பட்ட எண்ணப் போக்கின் காரணமாக, அடிப்படையில் அறபு மொழியில் அமைந்த வேதம், பிறமொழி எழுத்துக்களைப் பயன்படுத்த முடியாது என்ற காரணத்தினால், தமிழில் தன்னுடைய கற்பித்தல் குறிப்புகள் வழங்கும் போது, அதற்காக அறபு எழுத்துக்களை பயன்படுத்தியுள்ளார். இங்கு அறபு எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டு, தமிழில் விளக்கம் வழங்கப்பட்டுள்ளது. இதுவே அறபுத் தமிழ் பாவனை முறையாகும். அதாவது அறபுத்தமிழ் பாவனை இந்நூலில் பல இடங்களில் காணக்கூடியதாக உள்ளது. பாடங்களுக்கான தலைப்பிடல், சிறிய விளக்கக் குறிப்புகள், அடிக்குறிப்புகள் என்று பல்வேறு வடிவங்களில் இந்நூலில் அறபுத் தமிழ் பயன்படுத்தப்பட்டுள்ளதை காணலாம். இதை ஆரம்பக் கற்றல் நிலையில் உள்ள மாணவர்களுக்கு இல்லாமல், ஆசிரியர்களுக்காக வழங்கப்பட்டுள்ள குறிப்பாகவே கருதமுடியும். அறபு மொழியை சிறப்பாக வாசிப்பதற்கு பயிற்சி பெற்றவர்களால் இதனை இலகுவாக வாசித்து புரிந்து கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். ''ஓ.எம். பாஸி ஆலிம் அவர்கள் தனது தத்ரீஸுல் குர்ஆன் நூலின் மூலம் அறபு மொழியைக் கற்பிக்க விளையும் போது, அது தொடர்பான விளக்கக் குறிப்புக்களை அடிக்குறிப்புக்களாக அறபுத் தமிழில் முன்வைத்துள்ளமை மிக முக்கிய அம்சமாகும். குறித்த நூலின் எல்லாப் பக்கங்களிலும், இந்த அடிக் குறிப்புக்களை காண முடியும். முதலாம் பக்கத்திலேயே 'நுக்தா பாடம்' என்று ஆரம்பிக்கிறார். ''நுக்தா'' என்பது புள்ளி என்று பொருள்படும். அதாவது அறபியில் சில எழுத்துக்களின் மேல் அல்லது கீழ் புள்ளியிட்டு அவை அடையாளப்படுத்தப்படும். இத்தகைய புள்ளிகளை விளக்கும் பாடம் என்பதனால், அதற்கு இப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. மற்றொரு உதாரணம், நூலின் 20ஆம் பக்கத்தில் 'மத்துடைய ஹர்புகளை விபரிக்கும் பாடம்' என பெயரிடப்பட்டுள்ளது. அதாவது, அறபியில் நெடில் ஒலியன்கள் பற்றிய விளக்கம் இங்கு குறிப்பிடப்படுகிறது. 'மத்து' என்றால் நெடில் என்று பொருள். ஹர்பு என்றால் எழுத்து என்று பொருள்படும். வேறுபல இடங்களில் நீண்ட விளக்கங்களையும் அறபுத் தமிழில் கையாண்டுள்ளதைக் காணலாம். 'இத்காம் என்றால் ஒரு சுக்கூன் செய்யப்பட்ட ஹர்பை ஹரகத் செய்யப்பட்ட ஹர்பில் நுழைக்கிறது. சுகூனுள்ள ஹர்புக்குப் பின் ஷத்து உள்ள ஹர்பு சந்தித்தால் அந்த சுகூன் உள்ள ஹர்பை விட்டுவிட்டு, அதற்கு முன்னுள்ள ஹர்பை ஷத்து உள்ள ஹர்புடன் இத்காம் செய்ய வேண்டும்.' இது குர்ஆனை வாசிப்பது தொடர்பான ஒரு விதியாகும். அவ்விதியை அறபுத் தமிழிலில் விளக்கியுள்ளார்.'' (முகைதீன், 2019, பக்: 360)

**முடிவுரை**

அல்குர்ஆன் அறபு மொழியில் வழங்கப்பட்டுள்ள இறைவேதமாகும். இம்மொழியில் அமையப்பெற்றுள்ள அல்குர்ஆனை கற்பித்தலானது, அறபு மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பித்தல் (Teaching Arabic as Second Language) வகையில் அடங்கும். இத்தகு கற்பித்தல் முறையில் தாய்மொழிக்கு பாரிய செல்வாக்குண்டு. இதனை பல்வேறு ஆய்வுகள் மூலமாக அறிய முடிகின்றது. எனவே, தாய்மொழியில் கற்பிக்கின்ற போது முஸ்லிம்களிடையே பரவலாக காணப்பட்ட பிறமொழி பாவனை தொடர்பான எண்ணப்போக்கு செல்வாக்குச் செலுத்தியதன்

விளைவாக, அறபுத் தமிழ் பாவனை கையாளப்பட்டுள்ளது. அல்குர்ஆன் இறை வேதம் என்ற வகையில், அதனை பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தி கற்பிப்பதோ, விளக்குவதோ ஒரு தவறான காரியமாக கருதப்பட்ட காலத்தில், அப்போது இருந்த அறிஞர்கள் அறபுத் தமிழை மாற்றுவழியாகக் கையாண்டனர். அறபுத் தமிழ் என்பது அறபு எழுத்துக்களை பயன்படுத்தி, தமிழ் ஒலியன்களை எழுதும் வடிவமாக கருதப்படுகின்றது. அந்தவகையில் இவ்வாய்வு, தத்ரீஸுல் குர்ஆன் நூலை துணையாகக் கொண்டு அல்குர்ஆனை கற்பிப்பதற்கு அறபுத் தமிழின் வகிபங்கினை கண்டறிந்துள்ளதுடன், இலங்கை உயர் கல்வித்துறையில் இது தொடர்பில் ஆய்வுகளை விரிவுபடுத்த வேண்டும் என்றும் பரிந்துரை செய்கின்றது.

**உசாத்துணை**


அமீன், எம்.ஐ.எம், (2000). *இலங்கையில் இஸ்லாம்*, கொழும்பு: இஸ்லாமிக் புக் ஹவுஸ்.

அஸீஸ், எ.எம்.எ., (1963). *இலங்கையில் இஸ்லாம், (மறுபதிப்பு: 2007),*கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

ஆசாத், அப்தல் முயீத், (2017). பெரியவர்களும் அல்குர்ஆனை ஓதுவோம், மீள்பார்வை, http://meelparvai.net/?p=15731

மன்பயீ, அப்துர்ரஹ்மான், (தி.இ). அல்குர்ஆன் அறிமுகம், http://www.islamkalvi.com/quran/s_notes/introduction.htm

மஸாஹிர், எஸ்.எம்.எம்., (2018). *அறபுத் தமிழும் அறபுத் தமிழ் ஆக்கங்களும்,* ஒலுவில்: சமூகவியில் ஆய்வுக்கான மாணவர் ஆய்வு மன்றம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

மாலைமலர், (2019). கல்வியை கற்பது கல்வியை கற்றுக் கொடுப்பது, https://www.maalaimalar.com/devotional/devotionaltopnews/2019/07/23122010/1252505/islam-worship.vpf

முகைதீன், எச்.எல். மீரா, (2019)*அறபு மொழி கற்பித்தலில் தமிழ் மொழியின் செல்வாக்கு - ஓ.எம். பாஸி ஆலிமின் தத்ரீஸுல் குர்ஆன் பாடநூலை துணையாகக் கொண்ட ஆய்வு,* 6வது சர்வதேச ஆய்வு மாநாடு, ஒலுவில்: இஸ்லாமியக் கற்கைகள், அறபுமொழிப் பீடம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பாஸி ஆலிம் ஓ.எம்., (2017).*தத்ரீஸுல் குர்ஆன்*, சம்மாந்துறை: எம்.எப்.எம். சாலிஹ், பாஸிலேன்.

புஹாரி, முஹம்மத் பின் இஸ்மாயீல், ஸஹீஹுல் புஹாரி, 2002, பதிப்பு: 1, டமஸ்கஸ்: தாரு இப்னில் கஸீர்

தாரமீ, அப்துல்லாஹ் பின் அப்துர் ரஹ்மான், முஸ்னத் தாரமீ, 2000, பதிப்பு: 1, பாகம்: 1, ரியாத்: தாருல் முக்னி.

நு.ஃமான், எம்.ஏ, (தி.இ). தமிழில் இஸ்லாமிய இலக்கியம்:அதன் மொழியியல் தனித்துவம், *பேராசிரியர் எம்.எம். உவைஸ் நினைவு மலர்,* http://www.seu.ac.lk/pgufac/downloads/Prof.%20Uwais%20Memorial%20Seminar%20Publication.pdf

NIE, (2017).*இஸ்லாம் க.பொ.த. உயர்தரம் தரம் - 12 ஆசிரியர் வழிகாட்டி*, மஹரகம: தேசிய கல்வி நிறுவகம்.